# **கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி**

**முன்னிலை : செல்வி. D. ஜெயபாரதி., L.L.M.**

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.

2026–ம் வருடம் மார்ச் மாதம் 13– ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**Crl. M.P.No. 71/2026**

**CNR NO.TNTH02-008-109-2025**

பிரியதர்ஷினி, 24/25,
த/பெ. கைலங்கிரி
தெற்குத் தெரு, :: மனுதாரர் / புகார்தாரர்
கோட்டூர்,
தேனி வட்டம்,
தேனி மாவட்டம்.

**// எதிர் //**

1. கௌசிகன், 26/25,
த/பெ. லேட். முருகேசன்
போஸ்ட் ஆபீஸ் தெரு,
கோட்டூர், தேனி வட்டம்,
தேனி மாவட்டம்.

2. சிதம்பரம், 55/25.
த/பெ. பொன்னுச்சாமி
போஸ்ட் ஆபீஸ் தெரு, :: எதிரிகள்
கோட்டூர், தேனி வட்டம்
தேனி மாவட்டம்.

3. K. மாலா, 60/25.
க/பெ. காமராஜ்,
போஸ்ட் ஆபீஸ் தெரு,
கோட்டூர், தேனி வட்டம்
தேனி மாவட்டம்.

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.03.13 16:57:00 +0530

4. பிரகலாதன், 57/25,
த/பெ. வீராச்சாமி,
5–வது வார்டு, தெற்குத் தெரு,
கோட்டூர், தேனி வட்டம்,

5. அய்யப்பன், 55/25, :: எதிரிகள்
த/பெ, வீராச்சாமி,
5–வது வார்டு, தெற்குத் தெரு,
கோட்டூர், தேனி மாவட்டம்.

*****

இவ்வழக்கானது 05.01.2026–ம் தேதி இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.S.அமுதா, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரரால் 175 (3) BNSS–ன் கீழ் தனிப்புகாராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம் :**

1. மனுதாரர் தற்போது தேனி மாவட்டம் கோட்டூரில் குடியிருந்து வருவதாகவும், மனுதாரரும், 1–ம் எதிரியும் கணவன் மனைவி என்றும், 2–ம் எதிரி 1–ம் எதிரியின் சித்தப்பா என்றும், 3–ம் எதிரி 1–ம் எதிரியின் அத்தை என்றும், 4, 5 எதிரிகள் 1–ம் எதிரியின் தாய்மாமன்கள் என்றும், மனுதாரருக்கும், 1–ம் எதிரிக்கும் 08.06.2025–ம் தேதியன்று இருவீட்டார் சம்மதத்துடன் சின்னமனுரில் உள்ள விஜயாபாண்டியன் திருமண மண்டபத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றும், 1–ம் எதிரிக்கு அம்மா அப்பா இல்லாத காரணத்தினால் 2 முதல் 4 எதிரிகள் சேர்ந்து திருமணம் நடத்தி வைத்தனர் என்றும், மனுதாரரின் பெற்றோர் வரதட்சணையாக 100 பவுன் தங்க நகைகளும், மகேந்திரா தார் காரும், புல்லட் பைக் மற்றும் ரூ.5,00,000/– ரொக்கப் பணமும் வரதட்சணையாக கேட்டதாகவும், அதற்கு மனுதாரரின் பெற்றோரும்

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by
JAYABHARATHI DURAI
Date: 2026.03.13
16:57:06 +0530

சம்மதித்து 67–1/2 பவுன் நகை மற்றும் ரூபாய் 5 லட்சம் மதிப்பிலான வீட்டு உபயோகப் பொருட்கள் கொடுத்ததாகவும், மீத தங்க நகை, ரொக்கப்பணம், கார் மற்றும் புல்லட் பைக்கை 6 மாதத்திற்குள் வரதட்சணையாக கொடுத்து விடுவதாக மனுதாரரின் பெற்றோர் எதிரிகளிடம் உறுதியளித்திருந்ததாகவும், திருமணம் முடிந்தததில் இருந்து 1–வது எதிரி மனுதாரரிடம் அன்பாக பேசவில்லை என்றும், தாம்பத்ய உறவும் வைத்துக்கொள்ளவில்லை என்றும், 4, 5 எதிரிகள் 1–வது எதிரியை பள்ளத்தில் தள்ளிவிட்டதாக கூறிவிட்டு 1–வது எதிரி கோயம்புத்தூருக்கு வேலைக்கு சென்றுவிட்டதாகவும், இதுகுறித்து மற்ற எதிரிகளிடம் மனுதாரரின் பெற்றோர் கேட்டபோது மீது வரதட்சைணைய கொடுத்தால்தான் 1–வது எதிரி, மனுதாரருடன் சந்தோஷமாக வாழ்வார் என்று கூறியதாகவும், இது பற்றி ஊர் பெரியவர்களிடம் பேசியபோது மற்ற எதிரிகள் சேர்ந்து 1–வது எதிரியை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்தாகவும், 1–வது எதிரிக்கு தாம்பத்திய உறவில் ஈடுபட முடியாது என்றும் 1–வது எதிரி கூறியதாகவும், அது இல்லாமல் உன்னால் வாழ முடியாதா என்று மற்ற எதிரிகள் அசிங்கமாகப் பேசியதாகவும், எதிரிகளின் இச்செய்கையால் மனுதாரர் மனமுடைந்து நடைபிணமாக வாழ்வதாகவும்,

2. எதிரிகளின் இச்செய்கை குறித்து கடந்த 25.10.2025–ம் தேதி தேனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து ரசீது பெற்றுள்ளதாகவும், முறையாக விசாரணை செய்யாததன் காரணமாக கடந்த 17.11.2025–ம் தேதி தேனி மாவட்ட கண்காணிப்பாளரிடம் நேரில் புகார் அளித்தும் எந்த விசாரணையும் இல்லாததால் கடந்த 26.11.2025–ம் தேதி காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு தபால் மூலம் புகார் அனுப்பியதாகவும், அதன்பின்பும் காவல் துறையால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், எனவே , எதிரிகளின் இத்தகைய குற்ற செய்கையினை 85, 318(4) 316(2), 296(6), 351(2) BNS & Sec 4 of DP Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க தக்க உத்தரவு செய்ய வேண்டுமாய் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.03.13 16:57:11 +0530

**3.** மனுதாரரின் இம்மனுவானது அனுமதிக்கப்பட வேண்டுமா ? இல்லையா ? என்பதே இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

**4.** மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், மனுவில் கூறும் எதிர்மனுதாரர்களின் செயல்களால் மனுதாரர் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதும், மேற்படி சம்பவங்களுக்காக எதிரிகளுக்கு எதிராக தேனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 24.10.2025–ம் தேதியன்று புகார் மனு கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததன் காரணமாக பின்னர் 17.11.2025ம் தேதி தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மேற்படி புகாரைப் பெற்றுக்கொண்ட பின்பும் எவ்வித மேல்விசாரணையும் மேற்கொள்ளப்படாமலும், வழக்கு பதிவு செய்யப்படாமலும் இருந்து வருகிறது என்பதையும் அறிந்து கொள்ளமுடிகிறது. இவ்வழக்கில் காவல்துறையினர் சமர்ப்பித்த அறிக்கையில் மேற்படி புகார் தொடர்பாக சமூகநல அலுவலகத்திற்கு விசாரணக்காக அனுப்பப்பட்டு புகார் முடித்து வைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

5. மணவாழ்க்கை தொடர்பான குற்றங்களை பொறுத்தவரை நேரடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது. மேலும் காவல்துறை சார்பில் விசாரணைக்காக சமூக நலத்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வுத்தரவு கிடைத்த 1 (ஒரு) மாத காலத்திற்குள் தேனி அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் மனுதாரரின் புகாரின் பேரில் முன்விசாரணை மேற்கொண்டும், தகுந்த முகாந்திரம் இருக்கும் எனில் உரிய நபர்கள் மீது மட்டும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்றும், மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை அவ்வப்போது இந்நீதிமன்றத்திற்கு காலதாமதமின்றி அனுப்பி வைக்கவும் உத்தரவிடப்படுகிறது.

முடிவாக மனுதாரரின் இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

Signed by
JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.03.13 16:57:17 +0530

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள், இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.03.13 16:57:22 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
தேனி.